إدارة أوقاف صالح عبد العزيز الراجحي

# இஸ்லாத்தின் மூன்று அடிப்படைகள்

## சுருக்க விளக்கமும் பிற்சேர்க்கையும்

# இஸ்லாத்தின் மூன்று அடிப்படைகள்

## (சுருக்க விளக்கவுரையுடன்)


**அரபியில்:**

செய்க். அப்துல் அஸீஸ் இப்னு முஹம்மத்
அஷ்ஷெஸ்ரீ

**தமிழில்:**

எம். இஸட். முஹம்மது ஸு(Z)ஹைர்

(பீ.ஏ. நளீமி, அரபு மொழி டிப்ளோமா – சவ்தி அரேபியா)



**வெளியிடுவோர்:**

அழைப்பு வழிகாட்டல்களுக்கான
கூட்டுறவுச் செயலகம்

வடக்கு ரியாத் – சனசமூகப் பிரிவு

த. பெ. எண் – 87913, ரியாத் – 11652,

சவ்தி அரேபியா.

தொலைபேசி எண்: 4555555/4542222

பக்ஸ்: 4564829

**அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்**

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. சாந்தியும், சமாதானமும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்கள் தோழர்கள், குடும்பத்தினர் அனைவர் மீதும் உண்டாவதாக.

இச்சிறு வெளியீடு 'உஸூலுஸ் ஸலாஸஃ' இஸ்லாத்தின் மூன்று அடிப்படைகள் எனும் புத்தகத்தின் சுருக்கமாகும். இதனை எழுதியவர் இஸ்லாமிய அறிஞரும், பிரசாரகருமாகிய இமாம் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் என்பவர். இப்புத்தகத்தில் கூறப்படும் விடயங்களை அறிந்து செயற்படுவது ஒவ்வொரு முஸ்லிமான ஆண் பெண் அனைவர் மீதும் கடமையாகும்.

அவையாவன:

இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்கள் மூன்று:

1. அடியான் தனது 'ரப்பை' இரட்சகனை அறிதல்.
2. அடியான் தனது 'தீனை' மார்க்கத்தை அறிதல்.
3. அடியான் தனது நபியை அறிதல்.

❋❋ ❋ ❋❋

# முதலாவது அம்சம் : 'ரப்பு' பற்றிய அறிவு

உனது ரப்பு யார்? என உன்னிடம் கேட்டால் நீர் கூறும்,

*என்னையும் உலகில் உள்ள அனைத்தையும் அவன் அருளால் படைத்துப் பரிபாலித்துப் பரிபக்குவப்படுத்துகின்றான். அவனையே நான் அடிபணிந்து வணங்குகின்றேன். அவனையன்றி அடிபணிந்து வணங்க யாருமில்லை.*

இதற்கு ஆதாரமாக அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது;

**"எல்லாப் புகழும் அனைத்துலகிற்கும் ரப்பாகிய அல்லாஹ்வுக்கே உரித்தாகும்."**

**(அல்குர்ஆன் 1 : 1)**

அல்லாஹ்வைத் தவிர ஏனைய அனைத்தும் உலகமாகும். நானும் அவ்வுலகின் ஓரங்கமாகும்.

உனது 'ரப்பை' நீர் எவ்வாறு அறிந்து கொண்டாய்? என உன்னிடம் வினவப்பட்டால் நீர் கூறு;

*நான் எனது 'ரப்பை' அவனது அத்தாட்சிகள், படைப்புகள் இரவு, பகல், சூரியன், சந்திரன் என்பவற்றில் காணப்படும் அத்தாட்சிகள்; வானம், பூமி என்பவற்றில் காணப்படும் இறைவனது படைப்புகள் என்பவற்றின் மூலம் அறிந்து கொண்டேன்.*

*அல்லாஹ் எதற்காக உன்னைப் படைத்தான்? என உன்னிடம் வினவப்பட்டால் நீர் கூறும்;*

*அவனை வணங்குவதற்காகவே என்னைப் படைத்தான்.*

*இதற்கு ஆதாரமாக அல்லாஹ் அல்குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்:*

**"ஜின் வர்க்கத்தையும், மனித இனத்தையும் நான் என்னை வணங்குவதற்காகவே படைத்தேன்."**

***(அல்குர்ஆன் 51:56)***

*அல்லாஹ் கட்டளையிட்ட மகத்தான விடயம்* ***'தவ்ஹீத்'*** *எனும் ஏகத்துவக் கொள்கையாகும். வணக்க வழிபாடுகளில் அல்லாஹ்வை ஏகப்படுத்துவது என்பது இதன் கருத்து வெளிப்பாடாக அமைகிறது.*

*அல்லாஹ் தடுத்து நிறுத்திய பாரிய செயல்* ***'சிர்க்'*** *எனும் இணைவைத்தலாகும். அல்லாஹ்வுக்கு இணையாக ஏனையவற்றிடம் பிரார்த்தனை செய்வது என்பது இதன் கருத்து வெளிப்பாடாக அமைகிறது.*

*இதற்கு ஆதாரமாக அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:*

***"மேலும் நீங்கள் அனைவரும் அல்லாஹ்வுக்கே அடிபணிந்து வாழுங்கள். அவனோடு எதனையும் இணைவைக்காதீர்கள்."***

*(அல்குர்ஆன் 4:36)*

*அல்லாஹ் எதனை முதலில் உன்மீது கடமையாக்கியது? என உன்னிடம் வினவப்பட்டால் நீர் கூறும்:*

*'தாகூத்தை' நிராகரித்து அல்லாஹ்வை ஈமான் கொள்ள வேண்டும் என்பதாகும்.*
*(தாகூத் என்பது தனக்கு விதிக்கப்பட்ட ஆகுமான வரம்புகளை மீறி நடத்தல் எனப் பொருள்படும்.)*

*இதற்கு ஆதாரமாக அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:*

***"இனி எவர் தாகூத்தை நிராகரித்து, அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கின்றாரோ அவர் திட்டமாக மிகப்பலமான பிடிமானத்தைப் பற்றிக் கொண்டவராவார்."***

*(அல்குர்ஆன் 2 : 256)*

*இவ் இறைவசனத்தில் வரும்* ***அல் உர்வதுல் வுஸ்கா*** *மிகப் பலமான பிடிமானம் என்பது லாஇலாஹ இல்லல்லாஹு எனும் திருக்கலிமா என்று கூறப்படுகிறது. இதன் கருத்து:* ***அல்லாஹ்வைத் தவிர வணங்குவதற்குரியவன்*** *யாருமில்லை என்பதாகும்.*

✳ ✳ ✳ ✳ ✳

# இரண்டாவது அம்சம்: 'தீன்' பற்றிய அறிவு

உனது மார்க்கம் என்ன? என உன்னிடம் வினவப்பட்டால் நீர் கூறும்;

*எனது மார்க்கம் **'இஸ்லாம்'**. இஸ்லாம் என்பது, அல்லாஹ்வின் ஏகத்துவத்திற்கு முற்றிலும் அடிபணிந்து, அவனது கட்டளைகளுக்கு முழுமையாகப் பணிந்து நடந்து இணைவைத்தல், இணைவைப்போர் ஆகியோரை விட்டு விலகி நடத்தல் எனப் பொருள்படும்.*

*இஸ்லாம் மூன்று படித்தரங்களைக் கொண்டுள்ளது. அவை: இஸ்லாம், ஈமான், இஹ்ஸான்.*

*ஒவ்வொரு படித்தரமும் சில அம்சங்களைக் கொண்டுள்ளது.*

## 1. இஸ்லாம்

*இஸ்லாத்தின் அம்சங்கள் ஐந்து. அவையான:*

1. "அல்லாஹ்வைத் தவிர (வணங்குவதற்கு, சட்டம் இயற்றுவதற்கு, கீழ்படிவதற்கு) வேறு இறைவன் இல்லை" என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய அடிமையும், திருத்தூதரும் ஆவார்" என்றும் சான்று பகர்தல்.
2. தொழுகையை நிலை நிறுத்தல்.

3. ஸகாத் கொடுத்து வரல்.
4. ரமழான் மாதத்தில் நோன்பிருத்தல்.
5. ஹஜ்ஜை நிறைவேற்றல்.

## 2. ஈமான்

*ஈமானின் அம்சங்கள் ஆறு; அவையாவன:*

1. அல்லாஹ் ஒருவன் என நம்புதல்.
2. அல்லாஹ்வின் மலக்குகளை நம்புதல்.
3. அல்லாஹ்வின் வேதங்களை நம்புதல்.
4. அல்லாஹ்வின் தூதர்களை நம்புதல்.
5. மறுமை நாளை நம்புதல்.
6. நன்மை, தீமை அனைத்தும் அல்லாஹ்வின் புறத்திலிருந்தே உள்ளன எனும் 'கலா கத்ரை' நம்புதல்.

## 3. அல் இஹ்ஸான்

*இஹ்ஸான் என்பது; நீ அல்லாஹ்வை காண்கின்றாய் என நினைத்து அவனை வணங்குவது. அவ்வாறு நீர் அவனைக் காணமுடியாவிட்டாலும் அவன் உன்னைக் கண்டு கொண்டிருக்கின்றான் என்பதை உள்ளத்தில் கொண்டு அவனை வணங்குவதாகும்.*

*இஹ்ஸான் என்பதற்கு அல்குர்ஆனிலும், ஹதீஸிலும் தெளிவான ஆதாரங்கள் உண்டு. இறைவன் திருமறையில் பின்வருமாறு கூறுகின்றான்.*

**"நிச்சயமாகவே எவர்கள் (மெய்யாகவே) பக்தியுடையவர்களாக இருக்கின்றார்களோ அவர்களுடனும், எவர்கள் (பிறருக்கு) நன்றி செய்கின்றார்களோ அவர்களுடனும் தான் அல்லாஹ் இருக்கின்றான்."**

**(அல்குர்ஆன் 16 : 128)**

இஸ்லாத்தின் அடிப்படையும், அதன் வரைவிலக்கணமும் எது? என உன்னிடம் வினவப்பட்டால், நீர் கூறும்;

**அவை** இரண்டு.

1. *அல்லாஹ்வுக்கு மாத்திரமே நாம் வணங்க வேண்டும்.*

*இதற்கு ஆதாரமாக அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது;*

**"நபியே நீர் கூறும்; வேதம் அருளப்பட்டவர்களே! எங்களுக்கும் உங்களுக்குமிடையில் உள்ள பொதுவான ஒரு விஷயத்தின் பக்கம் வாருங்கள். அல்லாஹ்வைத் தவிர யாருக்கும் நாம் அடிபணிய மாட்டோம். அவனோடு எதனையும், எவரையும் இணைவைக்க மாட்டோம்."**

**(அல்குர்ஆன் 3:64)**

2. *அல்லாஹ் விதித்த சட்டதிட்டங்களுக்கு ஏற்ப அவனை நாம் அடிபணிதல் வேண்டும். 'பித்அத்'தான நூதன வழிமுறைகள் மூலம் அவனை அடிபணிதல் கூடாது.*

இதற்கு ஆதாரமாக ஹதீஸ் இவ்வாறு கூறுகிறது;

"நம்முடைய விஷயத்தில் (மார்க்கத்தின் போதனைகளோடு ஒத்துப்போகாத ஒரு செயலை எவராவது செய்யின் அது ஏற்றுக்கொள்ளப்படாது ஒதுக்கப்படும் அதாவது நிராகரிக்கப்படும்"

அறிவிப்பு: முஸ்லிம்.

*****

# மூன்றாவது அம்சம்:
# நபி (ஸல்) பற்றி அறிதல்

உனது 'நபி' யார்? என உன்னிடம் வினவப்பட்டால் நீர் கூறும்;

முஹம்மத் (ஸல்) அவர்கள். தந்தை பெயர் அப்துல்லாஹ். இவர் தந்தை பெயர் அப்துல் முத்தலிப். இவர் தந்தை பெயர் ஹாஷிம். ஹாஷிம் என்பவர் குறைஷி வம்சத்தைச் சேர்ந்தவர். குறைஷிகள் அரபிகளாவர். அரபியர் நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் மகன் நபி இஸ்மாயீல் (அலை) அவர்களின் சந்ததிகளாவர்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் பயணம் மேற்கொண்டார்கள். அல்லாஹ் தனது மார்க்கத்தை அவர்கள் மூலம் பூர்த்தியாக்கிய பின்னர் அங்கேயே அவர்கள் இறையடி எய்தினார்கள். இவர் அனைத்து நன்மையான விடயங்களையும் தனது உம்மத்திற்கு அறிவித்துக் கொடுத்ததுடன், அனைத்து தீமைகளிலிருந்தும் எச்சரித்து விளக்கினார்கள். நபி (ஸல்) அவர்கள் மீதும் ஏனைய நபிமார்கள் மீதும் அல்லாஹ்வின் நல்வாழ்த்துக்களும், சாந்தியும் உண்டாவதாக.

## ஹிஜ்ரத்

'ஹிஜ்ரத்' என்றால் என்ன? என உன்னிடம் வினவப்பட்டால், நீர் கூறும்;

*'ஹிஜ்ரத்' என்பது இணைவைப்போர்களது நாட்டிலிருந்து இஸ்லாமிய நாட்டிற்கு நகர்ந்து செல்வதைக் குறிக்கும்.*

'ஹிஜ்ரத்' செய்வதன் சட்ட விளக்கம் என்ன? என உன்னிடம் வினவப்பட்டால், நீர் கூறும்;

*மறுமை நாள்வரை ஹிஜ்ரத் செய்வது முஸ்லிம் உம்மத் மீது பர்ழாகும்.*

## மரணத்தின் பின் வாழ்வு

மனிதர்கள் இறந்த பின்னர் மீண்டும் எழுப்பப் படுவார்கள். மேலும், இறந்த பின் மீண்டும் எழுப்பப் படுவதை மறுத்த ஒருவர் நிராகரிப்பாளராகக் கருதப்படுவாரா? என உன்னிடம் வினவப்பட்டால், நீர் கூறும்; **ஆம்.**

அல்குர்ஆன் இதனைப் பின்வருமாறு உறுதிப் படுத்துகிறது.

**"(அவர்களிடம்) நீர் கூறும்; இல்லை என் அதிபதி மீது சத்தியமாக! நீங்கள் திண்ணமாக எழுப்பப்படுவீர்கள். பின்னர், (உலகில்) நீங்கள் என்னவெல்லாம் செய்தீர்கள் என்று உங்களுக்கு அறிவித்துத் தரப்படும். இவ்வாறு செய்வது அல்லாஹ் வுக்கு மிகவும் எளிதானதாகும்."**

**(அல்குர்ஆன் 64:7)**

# தொழுகை

*இஸ்லாத்தை சாட்சிகூறி ஏற்றுக்கொண்ட பின்னர், கட்டாய கடமையாக தொழுகை விதியாகி விடுகிறது. தொழுகையை நிறைவேற்ற முதல் பின்வரும் அம்சங்களை அறிதல் வேண்டும்.*

1. தொழுகையின் 'ஷர்த்துகள்' (நிபந்தனைகள்)
2. தொழுகையின் 'ருக்கூன்கள்' (கட்டாயமான அம்சங்கள்)
3. தொழுகையின் 'வாஜிபுகள்' (கட்டாய கடமைகள்)

*தொழுகையின் 'ஷர்த்துகள்' எத்தனை? என உன்னிடம் கேட்கப்பட்டால், நீர் கூறும்; ஒன்பது என்பதாக*

1. இஸ்லாத்தை ஏற்றிருத்தல்.
2. சுத்தி சுவாதீனமுடையவராக இருத்தல்
3. எதையும் பிரித்தறியும் வயதுடையவராக இருத்தல்.
4. சுத்தமுள்ளவராக இருத்தல்.
5. நஜீஸ் போன்றவற்றை விட்டும் நீங்கியிருத்தல்.
6. தொழுகை நேரமாயிருத்தல்.
7. அவ்ரத்தை மறைத்தல்.
8. கிப்லாவை முன்னோக்கல்.
9. நிய்யத்து வைத்தல்.

*கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவைகள்:*

'சுத்தமாக இருத்தல்' என்பது பெருந்துடக்கு, சிறுதுடக்கு என்பவற்றிலிருந்து சுத்தமாக இருத்தல் எனப்பொருள்படும். 'பெருந்துடக்கு' என்பது உடல் முழுவதையும் நீரால் கழுவுவதன் மூலமும், 'சிறுதுடக்கு' என்பது வுழூச் செய்வதன் மூலமும் நீக்கப்படும்.

வுழூவின் பர்ளுகள் எத்தனை? என உன்னிடம் வினவப்பட்டால் நீர், அவை ஆறு எனக் கூறும்:-

1. முகம் கழுவுதலுடன் வாய்க்கும், நாசுக்கும் தண்ணீர் செலுத்துதல்.
2. முட்டுக்கை வரை இரு கைகளையும் கழுவுதல்.
3. தலையின் எல்லாப் பகுதிகளையும் நீரால் தடவுதல். அத்துடன் இரு காதுகளையும் தடவுதல்.
4. கரண்டைக் கால்வரை இரு கால்களையும் கழுவுதல்.
5. மேற் சொன்னவற்றை ஒழுங்குரச் செய்தல்.
6. மேற் சொன்னவற்றை ஒரேமுறையில் நிறைவேற்றல்.

வுழூவை முறிக்கும் காரியங்கள் எத்தனை? என உன்னிடம் வினவப்பட்டால், அவை எட்டு என்பதாக நீர் கூறும்.

1. முன், பின் இரு துவாரங்களினூடே ஏதும் வெளிப்படல்.
2. இரு துவாரங்கள் தவிர்ந்த உடலின் ஏனைய இடங்களிலிருந்து அதிகமான இரத்தம் போன்ற நஜீஸ்கள் வெளிப்படல்.
3. புத்தி நீங்குதல்.

4. முன், பின் துவாரங்களைக் கையால் தொடுதல்.

5. இச்சையுடன் பெண்ணைத் தொடுதல்.

6. ஒட்டக இறைச்சி சாப்பிடுதல்.

7. இறந்தவரது உடலைக் குளிப்பாட்டுதல்.

8. இஸ்லாத்தை விட்டும் மறுதளித்தல். இந்நிலையை விட்டும் அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக!

*தொழுகையின் 'ருக்கூன்கள்' கட்டாய அம்சங்கள் எத்தனை? என உன்னிடம் வினவப்பட்டால், அவை பதினான்கு என நீர் கூறும்.*

1. தனக்கு முடியுமாக இருக்கும் போது நின்று தொழல்.

2. தக்பீரதுல் இஹ்ராம் கட்டுதல்.

3. பாதிஹா சூராவை ஓதுதல்.

4. ருகூ:வுக்குச் செல்லல்.

5. ருகூ:விலிருந்து நிலைக்கு வருதல்.

6. ஏழு உறுப்புக்கள் நிலத்தில் படும் வகையில் சுஜூத் செய்தல்.

7. சுஜூதிலிருந்து எழுந்திருத்தல்.

8. இரண்டு சுஜூதுகளுக்கிடையில் அமர்ந்திருத்தல்.

9. மேற் சொன்ன எல்லா அம்சங்களி (ருக்கூன்களி)லும் அமைதியைப் பேணல்.

10. எல்லாவற்றையும் ஒழுங்குற நிறைவேற்றல்.

11. இறுதித் தஷஹ்ஹுத் (அத்தஹிய்யாத்)

12. தஷஹ்ஹுதுக்காக உட்காருதல்.

13. அதில் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லல்

14. ஸலாம் கூறுதல்.

*தொழுகையின் வாஜிபுகள் (கட்டாய கடமைகள்) எத்தனை என்று உன்னிடம் கேட்கப்பட்டால், அவை எட்டு என்பதாக நீர் கூறும்;*

1. தக்பீரதுல் இஹ்ராம் தவிர்ந்த ஏனைய தக்பீர்கள்.
2. ருகூஃவில் 'ஸுப்ஹான ரப்பியல் அழீம்' எனக்கூறுதல்.
3. 'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா' என இமாமும் தனித்துத் தொழுபவரும் கூறுதல்.
4. அனைவரும் 'ரப்பனா வலகல் ஹம்து' என மொழிதல்.
5. ஸுஜூதில் 'ஸுப்ஹான ரப்பியல் அஃலா' எனக் கூறுதல்.
6. இரண்டு ஸஜ்தாக்களுக்கிடையில் 'ரப்பி இக்பிர்லீ' எனக் கூறுதல்.
7. முதலாவது தஷஹ்ஹுத்.
8. அதற்காக உட்கார்தல்.

*அல்லாஹ், அனைத்தையும் மிகவும் அறிந்தவன்.*

***முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்கள் குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் பிரார்த்தனையும், சாந்தி சமாதானமும் என்றென்றும் உண்டாவதாக!***

✳✳✳✳✳

التاملية

إدارة أوقاف صالح عبدالعزيز الراجحي

# مختصر

# ثلاثة الأصول

باللغة التاميلية

تأليف الشيخ

## عبدالعزيز بن محمد الشثري

«رحمه الله»

طبع على نفقة إدارة أوقاف
صالح بن عبدالعزيز الراجحي
غفر الله له ولوالديه ولذريته ولجميع المسلمين